Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JULY 18 2023

வியாழக்கிழமை 24, ஜூலை 2025 | ஒளி: 10 கதிர் 290 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



சம்பூர் மனித புதைகுழி:

## 30க்கு பின் தீர்மானம்

■ எஸ்.கீதபொன்கலன்

திருகோணமலை, சம்பூரில் மனித மண்டையோடு மற்றும் எலும்பு எச்சங்கள் கண்டெடுக்கப்பட்ட காணியில் தொடர்ந்து அகழ்வுகளை மேற்கொள்ள வேண்டுமா? இல்லையா? என்று எதிர்வரும் 30ஆம் திகதி சட்ட வைத்திய அதிகாரி, மிதிவெடி அகற்றும் குழுவின் ஆலோசனைகளுடன் அறிக்கை தர வேண்டும்.

அத்துடன், இப்பகுதியில் முன்னர் மயானம் ஏதும் இருந்ததா? என்பது பற்றி தொல்பொருள் திணைக்களம் அறிக்கையை முன்வைக்க வேண்டும் அவ் அறிக்கைகளின் படி அகழ்வு பற்றி தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று மூதூர் நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி. தஸ்னீம் பௌசான், புதன்கிழமை (23) அன்று உத்தரவிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2




## தென்னக்கோனை எப்படி நீக்குவது

### சபாநாயகர் சபைக்கு விளக்கம்

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தொடர்பில் ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையில், அவர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அவரை பதவி நீக்குவது தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தி வாக்கெடுப்பை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டது அடிப்படை சுதந்திரங்களை விகிதாசாரமற்ற முறையில் குறைத்ததாக நீதிமன்றம் தீர்மானம்

ரணிலால் 2022இல் பிறப்பித்த அவசரகால சட்டம்

# சட்டத்திற்கு புறம்பானது

### உயர் நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு

பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால், 2022 ஜூலை 17 அன்று நாடு முழுவதும் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்ட ஒழுங்குவிதிகள் அரசியலமைப்பிற்கு விரோதமானது என்றும் அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பிரதம நீதியரசர் முர்து பெர்னாண்டோ மற்றும் நீதியரசர் யசந்த கோடகொட உள்ளிட்ட மூன்று நீதியரசர்கள் கொண்ட அமர்வின் பெரும்பான்மையானவர்கள், பொது பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் வெளியிடப்பட்ட அவசரகால ஒழுங்குவிதிகள் தன்னிச்சையானவை மற்றும் செல்லுபடியாகாதவை என்று தீர்ப்பளித்துள்ளனர்.

அரகலய இயக்கத்தின் உச்சக்கட்டத்தின் போது, வெகுஜன போராட்டங்களைக் கட்டுப்படுத்த இந்த விதிமுறைகள் பிரகடனப்படுத்தப்பட்டன. அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது அடிப்படை சுதந்திரங்களை விகிதாசாரமற்ற முறையில் குறைத்ததாக நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இருப்பினும், நீதியரசர் அர்ஜுன ஒபேசேகர, இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, இந்த விதிமுறைகள் அடிப்படை உரிமைகளை மீறவில்லை என்று தீர்ப்பளித்துள்ளார்.

இந்த மனுக்களை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன், மாற்று கொள்கைகளுக்கான மையம் மற்றும் லிபரல் இளைஞர் இயக்கம் ஆகியோர் தாக்கல் செய்துள்ளனர்.

மனுதாரர்களுக்கான சட்டச் செலவுகளை அரசாங்கம் செலுத்த வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாராளுமன்றத்தில்

## "கொலைகாரர்களின் பிள்ளைகளும் உள்ளனர்"

தனிப்பட்ட சித்திரவதை முகாம்களின் உரிமையாளர்களும், கொலைகாரர்களின் பிள்ளைகளும் இந்த பாராளுமன்றத்தில் இருக்கின்றனர் என்று சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (23) அன்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது, ஐக்கிய மக்கள் சக்தி

எம்.பிக்களான ரோஹினி குமாரி விஜேரட்ன மற்றும் தயாசிறி ஜயசேக ஆகியோர் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் கேள்வியெழுப்பி உரையாற்றிய போது அவர்கள் முன்வைத்த கருத்துக்கள் தொடர்பில் கூறுகையிலேயே சபை முதல்வர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். 1989 பெப்ரவரி 8ஆம் திகதி ஶ்ரீ தலதா மாளிகை மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் ரோஹிணி குமாரி விஜேரட்ன



தொடர்ச்சி P2

## காதலியை கொன்றுவிட்டு காதலனும் மரணித்தார்

### பெண்ணின் தந்தை, தாய் மீதும் வெட்டு

■ பாறுக் ஷிஹான்


இளம் பெண்ணை கொன்று அவரது பெற்றோரை வெட்டி காயப்படுத்திய இளைஞன் தனது கழுத்தை அறுத்து தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

இச்சம்பவம் அம்பாறை மாவட்டம் பதியத்தலாவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மரங்கல பகுதியில் புதன்கிழமை (23) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியை சேர்ந்த இளம் பெண்ணொருவர் அவரது காதலன் என கூறப்படும் இளைஞனால் கழுத்தறுத்து கொலை செய்யப்பட்டுள்ளதுடன் பின்னர் காதலனும் தனது கழுத்தை அறுத்து தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் தனது காதலி எனப்படும் இளம் பெண்ணொருவரின் வீட்டிற்கு பிரவேசித்த இளைஞன் இளம் பெண்ணின் தாய் மற்றும் தந்தை மீதும் வெட்டியுள்ளார்.

தொடர்ச்சி P2



வெளிநாடு செல்லவிருந்த தாய்:

## கள்ளக்காதலனால் கழுத்தறுத்து படுகொலை

வெளிநாட்டுக்கு பணிப்பெண்ணாக செல்லவிருந்த மூன்று பிள்ளைகளின் 39 வயதான தாயொருவர், தன்னுடைய கள்ளக்காதலனால் கழுத்தறுத்து படுகொலை செய்யப்பட்ட சம்பவம் நாவலப்பிட்டிய, இம்புல்பிட்டிய தோட்டத்திலுள்ள பாழடைந்த பங்களாவுக்குள் இடம்பெற்றுள்ளது. அந்த பெண்ணின் கழுத்தை அறுத்து படுகொலை செய்த நபர், கம்பளை பொலிஸில் செவ்வாய்க்கிழமை (22) அன்று சரணடைந்த நிலையில், மேலதிக விசாரணைக்காக நாவலப்பிட்டிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## "வெள்ளை அறிக்கை இல்லாத விவாதம் பயனற்றது"

பிரதமர் வழங்கிய பவர்பொயிண்ட் விளக்கக்காட்சி அர்த்தமுள்ள விவாதத்திற்கு போதுமானதாக இல்லை என்று கூறிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, முன்மொழியப்பட்ட கல்வி சீர்திருத்தங்கள் குறித்த வெள்ளை அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

தொடர்ச்சி P2





மாரவில துப்பாக்கிச் சூட்டில்

## 'குடு மாலி' குடும்பத்தில் மகள் பலி: பேரன் படுகாயம்

மாரவில, மாரடை பகுதியில், செவ்வாய்க்கிழமை (22) இரவு முச்சக்கர வண்டியில் பயணித்துக்கொண்டிருந்த போது, மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இரண்டு குழந்தைகளின் தாய் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும், அவரது மூத்த குழந்தை படுகாயமடைந்ததாகவும் மாரவில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## கறுப்பு ஜூலை நினைவு தினம்...




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கறுப்பு ஜூலை நினைவுதினம் உணர்வுப்பூர்வமாகப் புதன்கிழமை (23) அனுஷ்டிக்கப்பட்டது.
பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் கறுப்பு ஜூலை நினைவுருவ படத்திற்கு மாணவர்களால் அகவணக்கம் செலுத்தப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.
1983 கறுப்பு ஜூலை வாரத்தில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பான நினைவு உரையும் இடம்பெற்றது. நினைவேந்தலில் பல்கலைக்கழக மாணவர்கள் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

– நிதர்ஷன் வினோத்

## "சபாநாயகரின் வாயை மூடச்சொன்ன எம்.பி"

"வாயை மூடிக்கொண்டிருங்கள்" என்று சபாநாயகர் ஜகத் விக்கிரமநாயக்கவை பார்த்து ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன கூறியதால் சபையில் சர்ச்சை ஏற்பட்டது.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## "வெள்ளை அறிக்கை இல்லாத விவாதம் பயனற்றது"

மின்சாரச் சட்டத்தில் திருத்தங்கள் குறித்த திட்டமிடப்பட்ட விவாதத்தைத் தொடர வேண்டாம் என்று பாராளுமன்றத்தின் அலுவல்கள் குழு முடிவு செய்ததை அடுத்து, கல்வி சீர்திருத்த முன்மொழிவுகளில் கவனம் செலுத்தத் தேர்வு செய்ததைத் தொடர்ந்து இந்தக் கோரிக்கை வந்தது.

"வெள்ளை அறிக்கை இல்லாமல் விவாதம் நடத்துவது பயனற்றது" என்று பிரேமதாச கூறினார்" பிரதமர் ஒரு பவர்பொயிண்ட் விளக்கக்காட்சி மூலம் சீர்திருத்தங்களை வழங்கினார். இது பொருத்தமானதல்ல. அத்தகைய முறை நாட்டின் கல்வித் துறையையும் அதன் இலவச கல்வி முறையையும் அவமதிக்கிறது," என்று அவர் கூறினார்.

நாளை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் விவாதத்திற்கு முன்னதாக, அரசாங்கத்தை முறையான விவாத ஆவணத்தை சமர்ப்பிக்குமாறு அவர் வலியுறுத்தினார். அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பங்களிப்புகளுக்கு போதுமான நேரத்தை அனுமதிக்க விவாதத்தை மூன்று நாட்களுக்கு நீட்டிக்க வேண்டும் என்றும் பிரேமதாச கேட்டுக்கொண்டார்.

இதற்கு பதிலளித்த சபைத் தலைவர் பிமல் ரத்நாயக்க, முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்கள் குறித்து பொதுமக்களுக்குத் தெரிவிப்பதே இந்த விவாதத்தின் நோக்கம் என்றார்.

இன்னும் இறுதிப்படுத்தப்பட்ட ஆவணம் இல்லாததால், ஒரு பரந்த பொது விவாதம் அவசியம்," என்று ரத்நாயக்க கூறினார். "சீர்திருத்தங்களின் இறுதி வரைவை விரிவான விவாதம் மற்றும் ஈடுபாட்டிற்குப் பிறகுதான் முடிக்க முடியும்.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் அச்சிடுதல் இல்லாத காலத்தில் வெள்ளை அறிக்கைகள் ஒரு பாரம்பரியமாக உருவானது என்று அவர் கூறினார்.

இன்று, நாம் டிஜிட்டல் யுகத்தில் இருக்கிறோம், அங்கு பவர்பொயிண்ட் விளக்கக்காட்சிகள் அல்லது பிற தொழில்நுட்ப வழிமுறைகள் மூலம் தகவல்களைப் பகிர முடியும். பவர்பொயிண்ட் விளக்கக்காட்சி என்பது அவமானம் அல்ல, என்று அவர் மேலும் கூறினார்.

## "கொலைகாரர்களின்...

கேள்வியெழுப்பியதுடன், அவரை தொடர்ந்து தயாசிறி ஜயசேகர இடைக் கேள்வியை எழுப்பி உரையாற்றினாஇதன்போது, ஸ்ரீ தலதா மாளிகை மீது நடத்தப்பட்ட தாக்குதலின்போது, 17 துப்பாக்கிகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. அத்துடன், இதனுடன் தொடர்புடைய சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அப்போது> பெரஹராவை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. முன்னாள் பொலிஸ் அதிகாரி என்ற வகையிலும், தற்போதைய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையிலும் இது தொடர்பான தகவல்களை அறிந்திருப்பீர்கள் அதனை வழங்குங்கள் என்று தயாசிறி ஜயசேகர கூறினார்.

இதனை தொடர்ந்து சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க தனது கருத்தை முன்வைத்து கூறுகையில்,

மாத்தளை மனித புதைகுழியில் 140 வரையிலான எலும்புகூடுகள் மீட்கப்பட்டுள்ளன. அந்த கொலைகாரர்களின் மகள்மார் இங்கே இருக்கின்றனர். இது தொடர்பில் விசாரணை நடத்தப்படுகின்றது. இங்கே இருப்பவர்களில் சிலர் தனிப்பட்ட சித்திரவதை முகாம்களின் உரிமையாளர்களே என்றார்.

இவ்வேளையில் ஒழுங்கு பிரச்சினையை எழுப்பி எழுந்த தயாசிறி ஜயசேகர, அவ்வாறு இங்கே சித்திரவதை முகாம் வைத்திருந்தவர்கள் இருப்பார்கள் என்றால் அவர்கள் யார் என்று கூறுங்கள் என்றார். இதனை தொடர்ந்து, மீண்டும் எழுந்த சபை முதல்வர், 88/89 காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்த எம்.பிக்கள், அமைச்சர்கள் தனிப்பட்ட சித்திரவதை முகாம்களை வைத்திருந்தனர் என்பது புதிய விடயமா? குண்டுத்தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் நபர் ஐக்கிய தேசியக் கட்சியில் கண்டியில் தேர்தலில் போட்டியிட்டார். 88/89 காலத்தில் 60 ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டனர். சித்திரவதை முகாம்களை நடத்தினர். பெயர் மட்டுமல்ல, நீதிமன்ற நடவடிக்கை ஊடாக இவர்களை கைது செய்வோம் என்றார்.

## புதிய பிரதம நீதியரசர் பத்மன் சூரசேன



புதிய பிரதம நீதியரசராக உயர்நீதிமன்ற நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேனவின் பெயரை அரசியலமைப்பு சபை இன்று (23) அங்கீகரித்தது. நீதியரசர் சூரசேனவின் பெயரை ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க இந்தப் பதவிக்கு பரிந்துரைத்தார். அவர் இலங்கையின் 49ஆவது தலைமை நீதியரசராகிறார்.

# தென்னக்கோனை எப்படி நீக்குவது

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (23) அன்று சபாநாயகர் அறிவிப்பின் போதே அவர் இதனை கூறினார்.

சபாநாயகர் தனது அறிவிப்பில் மேலும் தெரிவிக்கையில்,

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் முறையற்ற செயற்பாடுகள் மற்றும் பதவி அதிகாரங்களை பாரதூரமான வகையில் பயன்படுத்தியமை தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை தொடர்பில் முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் சபைக்கு தெளிவுப்படுத்த வேண்டியுள்ளது.

இதன்படி, ஜூலை 22ஆம் திகதி சபையில் சமர்பிக்கப்பட்ட அறிக்கையின் ஆங்கில பிரதி அன்றைய தினமே பாராளுமன்ற இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த அறிக்கையை அச்சிட்ட பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த அறிக்கையின்படி, தேசபந்து தென்னக்கோன் குற்றவாளியாக தீர்மானிக்கப்பபட்டுள்ளது.

2001/05ஆம் இலக்க பதவிநிலைகளை நீக்குதல் தொடர்பான ஏற்பாடுகளுக்கமைய 17ஆம் சரத்தின் பிரகாரம் அவரை அந்தப் பதவியில் இருந்து நீக்குவதற்கான யோசனையை பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை பாராளுமன்ற நிலையியல் கட்டளை 27க்கு அமைய இந்த யோசனை பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டு 5 நாட்களின் பின்னர் இது பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படுவதுடன், அது தொடர்பில் பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழுவினால் தீர்மானிக்கப்படும் நாளில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள முடியும்.

இதன்படி, பாராளுமன்றத்தில் சமூகமளிக்காத உறுப்பினர்கள் உள்ளடங்கலாக மொத்த பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் இந்தத் தீர்மானித்திற்கு ஆதரவாக வாக்களித்தால் அவரை பதவி நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பது தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிக்கப்படும் என்றார்.

# 'குடு மாலி' குடும்பத்தில் மகள் பலி: பேரன் படுகாயம்

கொலை செய்யப்பட்டவர் மாரவில, மாரடை பகுதியைச் சேர்ந்த எதிரிசிங்க ஆராச்சிகே வசந்தி சதுராணி எனப்படும் சதாமாலி என்ற 30 வயதுடைய பெண்ணாவார்.

ஏதோ ஒரு வேலைக்காகச் சென்று பின்னர் வாடகைக்கு எடுக்கப்பட்ட முச்சக்கர வண்டியில் தனது பத்து வயது மகனுடன் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இரண்டு துப்பாக்கிதாரிகளால் சுடப்பட்டு, முச்சக்கர வண்டிக்குள் இறந்ததாக மாரவில பொலிஸார் கூறியுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த அவரது பத்து வயது மகன் மாரவில பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இறந்தவர், மாரவில மாரடை பகுதியில் பிரபல ஹெரோய்ன் மற்றும் பிற போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட குடு மாலி என்ற பெண்ணின் மூத்த மகள் என்று கூறப்படுகிறது.

குடு மாலி என்ற பெண், போதைப்பொருள் குற்றச்சாட்டில் நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டு பல முறை போதைப்பொருள் குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்ட ஒரு பெண் என்றும் கூறப்படுகிறது.

அதே நேரத்தில், குடு மாலியின் மூன்று மகள்களும் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டவர்கள் என்றும் கூறப்படுகிறது. கொலை செய்யப்பட்ட பெண்ணும் போதைப்பொருள் குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்டு சமீபத்தில் விடுவிக்கப்பட்டுள்ளார்,

மேலும், மராடை உட்பட பல பகுதிகளுக்கு, தாயும் மூன்று மகள்களும் போதைப்பொருட்களை விநியோகிப்பதாகவும், இதன் விளைவாக, பல இளம் உயிர்கள் போதைப்பொருட்களுக்கு அடிமையாகி, பொதுமக்களின் பெரும் அதிருப்திக்கு ஆளான ஒரு குடும்பமாக மாறிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவர் தற்போது போதைப்பொருள் கடத்தல் மற்றும் பயன்பாடு குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

விசாரணையை நடத்தி வரும் மாரவில பொலிஸார், துப்பாக்கிச் சூட்டில் பிஸ்டல் வகை துப்பாக்கி பயன்படுத்தப்பட்டதாகவும், மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றதாகவும் கூறுகின்றனர்.

துப்பாக்கிச் சூடு தொடர்பாக பல பிரிவுகளின் மூலம் பல பொலிஸ் குழுக்கள் விசாரணைகளைத் தொடங்கியுள்ளன, மேலும் இது போதைப்பொருள் தொடர்பான தகராறின் விளைவாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# "சபாநாயகரின் வாயை...

புதன்கிழமை (23) அன்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது ரோஹினி குமார விஜேரத்ன, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் கேள்வியெழுப்பிய வேளையில், அந்தக் கேள்வியுடன் தொடர்புடையதாக சில விடயங்களை முன்வைத்து ரோஹினி குமாரி உரையாற்றிக்கொண்டிருந்த போது, சபாநாயகர் "உங்களின் கேள்வியை கேளுங்கள்" என்று அடிக்கடி கூறிக்கொண்டிருந்த நிலையிலேயே இவ்வாறு சர்ச்சை ஏற்பட்டது.

1989 பெப்ரவரி 8ஆம் திகதி ஸ்ரீ தலதா மாளிகை மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் கேள்வியெழுப்பியிருந்த ரோஹினி குமாரி விஜேரட்ன, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் பதிலை தொடர்ந்து இரண்டாவது இடைக் கேள்வியை எழுப்பி, தலதா மாளிகைக்கு முன்பாக உள்ள வீதி மூடப்பட்டுள்ளதாகவும், இதனால் தற்போது பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதாகவும் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் நிலைமை இல்லாத நிலைமையில் ஏன் இந்த வீதியை திறக்கமால் வைத்திருக்க வேண்டும் என்று கூறி, வடக்கில் வீதிகள் திறக்கப்படுகின்றது என்றும் பாதாள குழுக்களின் மோதல்கள் அவர்களின் தனிப்பட்ட பிரச்சினை என்றும் கூறுகின்றீர்கள் என்றால் ஏன், வீதியை மூட வேண்டும் என்று கேட்டார்.

இவ்வேளையில், நீங்கள் உங்களுடைய கேள்வியை முன்வையுங்கள். கேள்வியை கேட்காமல் நேரத்தை வீணடிக்க வேண்டாம் என்று சபாநாயகர் கூறிய போது, கேள்விதான் கேட்கின்றேன். நீங்கள் கேட்டுக்கொண்டிருங்கள் என கூறிய ரோஹினி குமாரி தொடர்ந்தும் உரையாற்றினார். இதன்போது தொடர்ந்தும் சபாநாயகர் உங்களின் கேள்வியை கேளுங்கள் என்று கூறிக்கொண்டிருந்த நிலையில், "ஐயோ வாயை மூடிக்கொண்டு நான் பேசுவதை கேட்டுக்கொண்டிருங்கள்" என்று சபாநாயகரை நோக்கி ரோஹினி குமாரி எம்.பி கூறியதால், நீங்கள் யாரை பார்த்து அவ்வாறு கூறுகின்றீர்கள் என்றதால் சபையில் சர்ச்சை ஏற்பட்டது. இதன்போது எழுந்த அமைச்சர் மகிந்த ஜயசிங்க, இதனை பாடசாலை என்று நினைத்துக்கொண்டிருக்க வேண்டாம். ஆசிரியர்கூட பேசாத ஒன்றையே இவர் இங்கே கூறியுள்ளார். தயவு செய்து அந்த எம்.பி. அந்த கருத்தை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றார். இதனை தொடர்ந்து, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபாநாயகர் இவ்வாறு கேள்வி கேட்க இடமளிக்காமல் இருக்க முடியாது என்று எழுந்து கோசமெழுப்பினர். இதன்போது ஆளும் கட்சி உறுப்பினர்களும் எதிர்க்கட்சியினருடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர். இதனால் சிறிது நேரம் சபையில் அமைதியின்மை நிலவியது.

## காதலியை கொன்றுவிட்டு காதலனும் மரணித்தார்

இத்தாக்குதலினால் காயமடைந்த தாயும் தந்தையும் மஹாஓயா ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொலை செய்யப்பட்டவர் 23 வயதான சரோஜா உதயங்கனி என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் கொலையைச் செய்த இளைஞன் மொனராகலை பகுதியைச் சேர்ந்தவர் என ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.


சம்பவம் குறித்து பதியத்தலாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## 30க்கு பின் தீர்மானம்

கடந்த 19ஆம் திகதி மிதி வெடி அகற்றும் குழுவினர் இப்பகுதியில் அகழ்வு செய்த போது மனித எலும்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதனை அடுத்து மூதூர் பதில் நீதிவானின் உத்தரவை அடுத்து அகழ்வுப் பணிகள், செவ்வாய்க்கிழமை (22) வரை இடைநிறுத்தப்பட்டன.

இந்நிலையில், மூதூர் நீதிவானின் தலைமையில் சட்ட வைத்திய அதிகாரி,பொலிஸ் தடயவியல் பிரிவினர், அரச பகுப்பாய்வு அலுவலர்கள், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியக அலுவலர்கள், காணாமல் போனோர் அலுவலக ஆணையாளர் மிராஜ் ரஹீம் ஆகியோர் முன்னிலையில் கள ஆய்வுகள், புதன்கிழமை (23) அன்று நடைபெற்றன.

## கள்ளக்காதலனால் கழுத்தறுத்து படுகொலை



படுகொலைச் செய்யப்பட்ட பெண், சந்தேக நபருடன், கம்பளை, புசல்லாவை பகுதியில் 9 மாதங்களாக வசித்து வந்துள்ளார் எனவும், தனது சட்டப்பூர்வ கணவரின் வீட்டுக்கு செவ்வாய்க்கிழமை (22) அன்று சென்றுள்ளார் எனவும், அங்கிருந்து தன்னுடைய கள்ளக்காதலனுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பெண் வீட்டு வேலைக்காக வெளிநாடு செல்ல திட்டமிட்டிருந்தார் எனவும், அதற்கு கள்ளத் தொடர்பை பேணிய நபர் கடும் எதிர்ப்பை வெளியிட்டுவந்தார் எனவும் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேற்படி பெண்ணுக்கு அழைப்பை ஏற்படுத்திய சந்தேக நபர் பாழடைந்த பங்களாவுக்குள் அவரை செவ்வாய்க்கிழமை (22) அழைத்துள்ளார். அவ்வாறு சென்ற வேளையிலேயே கழுத்தை அறுத்து கொலை செய்துள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் நாவலப்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

# "எனது நான்கு கேள்விகளுக்கு இன்னும் பதிலே இல்லை"

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்காக மீளச்செலுத்தும்

தேவையற்ற 65மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க இந்தியா முன்வந்துள்ள நிலையிலும் இத்துறைமுகத்தை மீள் இயக்குவதற்கான சூழலியல் தாக்க மதிப்பாய்வு அறிக்கையும் தயாரிக்கப்பட்டுள்ள பின்னரும் இத்துறைமுக அபிவிருத்தி காலந்தாழ்த்தப்படுவதற்கான காரணம் என்னவென தமிழரசுக்கட்சியின் பாராளுமன்றக் குழுத்தலைவரும் யாழ். மாவட்ட எம்.பியுமான சிவஞானம் சிறீதரன்கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (23) அன்று நிலையியற்கட்டளை 27/2 இல் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரும்,பாராளுமன்ற சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்கவிதமே இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

மேலும் இது தொடர்பில் சிறீதரன் எம்.பி. பேசுகையில்,

இலங்கையிலுள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகங்களில் ஒன்றான காங்கேசன்துறை துறைமுகம் போருக்கு முற்பட்ட காலத்தில் மிகச்சிறப்பாக இயங்கி வந்துள்ளது. அந்த அடிப்படையில் காங்கேசன்துறை துறைமுகத்தை வர்த்தக நோக்கத்திற்கான துறைமுகமாகப் புனரமைப்பதன் மூலம் இந்தியாவிற்கு அதிலும்கு றிப்பாக தென்னிந்தியாவுக்கும் வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்குமான பொருள் பரிமாற்றம் சார் வர்த்தகநடவடிக்கைளிலும், சுற்றுலாப் பயணிகளின் வருகையிலும், அந்நிய செலாவணியை ஈட்டுவதிலும் பாரியமாற்றத்தை ஏற்படுத்த முடியும். 2009 வரையான 30 ஆண்டு கால யுத்தம், பிற்பட்ட 15 ஆண்டுகள் என கிட்டத்தட்ட 45 ஆண்டுகள் அபிவிருத்தியில் பின்தங்கியுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பொருளாதார வளர்ச்சியிலும், இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியின் கடைசிப் பங்காளியாகவுள்ள வடக்கு மாகாணத்தின் பங்களிப்பைஅதிகரிக்கவும் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி முக்கியத்துவம் பெறுகிறது.

இத்துறைமுக அபிவிருத்திக்காக 65மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க இந்தியா முன்வந்துள்ளதால் மீளச்செலுத்தும்

தேவையற்ற இந்த நிதியுதவி மூலம் மேற்படி துறைமுகத்தைப் புனரமைத்து மீள ஆரம்பிக்க முடியும் என்றநிலையில், இத்துறைமுகத்தை மீள் இயக்குவதற்கான சூழலியல் தாக்க மதிப்பாய்வு அறிக்கையும் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னரும் இத்துறைமுக அபிவிருத்தி காலந்தாழ்த்தப்படுவதற்கான காரணம் என்ன?.

இலங்கையின் வரலாற்றில் இத்துறைமுகம் கொண்டிருந்த பொருளாதார பங்களிப்பு இப்பொழுதுஇல்லாமலுள்ளது. இதனை மேம்படுத்தச் சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரித்தல் மற்றும்உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி - இறக்குமதி மூலமான அந்நியச் செலாவணியை ஈட்டும் திட்டங்கள் எவையேனும் அரசிடம் உள்ளதா? என.றார்.

# மாமாங்கேஸ்வரர் ஆலயத் தேர்த் திருவிழா

■ வ.சக்தி

வரலாற்றுச் சிறப்பு மிக்க மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தேர்த்திருவிழா புதன்கிழமை(23) அன்று வெகு விமர்சையாக நடைபெற்றது.

ஆலயத்தில் இடம்பெற்ற, விசேட கிரியை வழிபாடுகளைத் தொடர்ந்து, வசந்த மண்டபம் பூஜை நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் அரோகரா கோசத்துடன், மாமாங்கேஸ்வரர் அலங்கரிக்கப்பட்ட தேரில் அருள் பாலித்தார்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப்பெற்று, இராம பிரானால் வழிபட்டதாகக் கூறப்படும், வரலாற்றைத் தொன்மையும், புகழும் மிக்க இந்த ஆலயத்தின் ஆடி அமாவாசை தினமான வியாழக்கிழமை(24) அன்று தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

















# சுட்டக் கோழி சாப்பிட்ட 19 பேருக்கு வாந்தி

■ ஏ.எச்.ஹஸ்பர்

திருகோணமலை, கிண்ணியா பகுதியில் சுட்டக் கோழி (பார்பிக்யூ) இறைச்சியை உட்கொண்ட 10 பெண்கள் 06 ஆண்கள், 03 சிறுவர்கள் என 19 பேர் உணவு ஒவ்வாமையால் பாதிக்கப்பட்டு கிண்ணியா தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை நகர சபையின் தலைவர் மஹ்தி பார்வையிட்டுள்ளதுடன், இதேபோன்று மூதூர் வைத்தியசாலையில் மூவரும் நிலாவெளியில் இருவரும் அனுமதிக்கப்பட்டு இருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

செவ்வாய்க்கிழமை (22) அதிகாலை 4 மணியிலிருந்து வயிற்றோட்டம், வாந்தி, அதிக உஷ்ணத்துடனான காய்ச்சல் போன்ற அறிகுறிகள் ஏற்பட்டு அவதியுற்ற நிலையில், அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அனுமதிக்கப்பட்ட நோயாளிகளிடம் விசாரணைகள் செய்த போது, அவர்கள் அனைவரும் சுட்டக் கோழி இறைச்சியுடன் இரவு உணவை சாப்பிட்டதாகவும் அந்த உணவை ஒரே கடையில் வாங்கியதாகவும் கூறுகின்றனர்.

அனுமதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு ஏற்பட்ட இந்த வியாதிகளுக்கு குறிப்பிட்ட அந்த உணவு தான் காரணம் என வைத்தியர்களின் அறிக்கைகள் மற்றும் பரிசோதனைகள் மூலம் உறுதிப் படுத்தப்பட்டால் அந்த உணவுகளை விற்பனை செய்த கடை உரிமையாளருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறியுள்ளார்.



# 13 வயது சிறுமியை வன்புணர முயன்ற கான்ஸ்டபிள் கைது

தெஹிவளை, நெடிமால பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றுக்குள் நுழைந்து, தூங்கிக் கொண்டிருந்த 13 வயது சிறுமியுடன் உடலுறவு கொள்ள முயன்றதாகக் கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை கைது செய்துள்ளதாக தெஹிவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள், மேற்கு தெற்கு போக்குவரத்து பிரிவில் இணைக்கப்பட்ட தெஹிவளை பொலிஸ் நிலையத்தில் சிறப்பு பணியில் ஈடுபட்டுள்ளவர் ஆவார். குடியிருப்பாளர்களால் தாக்கப்பட்ட கான்ஸ்டபிள், சிகிச்சைக்காக களுபோவில போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தெஹிவளை, நெடிமால பகுதியில் உள்ள ஒரு வீட்டிற்குள் நுழைந்த ஒருவர் சிறைபிடிக்கப்பட்டதாக வந்த புகாரைத் தொடர்ந்து, இரவு நேர ரோந்து அதிகாரிகள் சம்பவ இடத்திற்குச் சென்று சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

# மின்சாரம் தாக்கத்தில் இளைஞன் உயிரிழப்பு

கலஹிடியாகம பிரதேசத்தில் உள்ள ஒரு வீட்டில் மின்சாரம் தாக்கி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 19 வயது இளைஞன் உயிரிழந்துள்ளதாக கபுகொல்லாவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இறந்தவர் கலஹிடியாகம, கபுகொல்லாவ பகுதியைச் சேர்ந்த மலிது நிம்சார நிர்மல் சுரவீர (19 வயது) என தெரியவந்துள்ளது.

குறித்த இளைஞன் அறுவடை இயந்திரத்தைக் கழுவிக் கொண்டிருந்தபோது, ஏற்பட்ட மின் கசிவு காரணமாக இவ்வாறு மின்சாரம் தாக்கத்திற்குள்ளாகியதாக தெரியவந்துள்ளது.

இச் சம்பவத்தின் போது வீட்டில் யாரும் இல்லை எனவும் அவரது வீட்டைக் கடந்து சென்ற உறவினர் ஒருவர் , தரையில் விழுந்து கிடந்த இளைஞனைக் கண்டு அருகிலிருந்த வீட்டாருடன் இணைந்து வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளார்.

# யானை தாக்கியதில் ஒருவர் பலி; ஒருவர் படுகாயம்

■ எஸ்.கீதபொன்கலன்

சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுமேதங்கபுர எனும் பகுதியில் வைத்து யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்து மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ள சம்பவம் புதன்கிழமை (23) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

மூதூர் - மல்லிகைத்தீவச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான தம்பிராசா வர்ணகுல ரெட்ணம் (வயது 47) என்பவரே உயிரிழந்துள்ளதுடன், தோப்பூர் -நாராயண புரத்தைச் சேர்ந்த யோகராசா (வயது 46) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

சேருநுவர பொலிஸ் பிரிவில் உள்ள மாங்குளம் என்ற பகுதியில் மீன் பிடித்து விட்டு தங்களுடைய வீட்டுக்குத் திரும்புகையிலேயே யானை தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



உயிரிழந்தவரின் சடலம் சேருவில வைத்தியசாலையில் வைக்கப்பட்டு மூதூர் நீதிமன்ற நீதிபதி தஸ்னீம் பௌசான் சடலத்தை பார்வையிட்டதுடன், உடற்கூற்று பரிசோதனைக்காக சடலம் திருகோணமலை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

படுகாயமடைந்தவர் மேலதிக சிகிச்சைகளுக்காக மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



# மீனவரின் சடலம் கரையொதுங்கியது

■ ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - மதுரங்குளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொடுவா கடல் பகுதியில் செவ்வாய்க்கிழமை (22) அன்று சடலமொன்று கரையொதுங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கரை ஒதுங்கிய சடலம், சிலாபம் பகுதியில் இருந்து கடந்த சனிக்கிழமை (19)அன்று கடலுக்குச் சென்று காணாமல் போன இரண்டு மீனவர்களில் ஒருவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் மதுரங்குளி பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

37 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சிலாபம் பகுதியில் இருந்து கடந்த சனிக்கிழமை (19) அன்று கடலுக்குச் சென்ற மூன்று மீன்பிடி இயந்திர படகுகள் பலத்த காற்று மற்றும் புயலில் சிக்கியுள்ளதுடன், இதன்போது இரண்டு மீன்பிடி இயந்திர படகுகளில் பயணித்த மீனவர்கள் பாதுகாப்பாக நீந்திக் கரை சேர்ந்துள்ளனர்.

மற்றைய ஒரு படகு மற்றும் படகில் பயணித்த 37 மற்றும் 40 வயதுடைய இரண்டு மீனவர்கள் காணாமல் போயுள்ளதுடன், இலங்கை விமானப் படையினரால் ஹெலிகொப்டர் மூலம் அவர்களை தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதும் எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை என கூறப்படுகிறது.

இந்த நிலையிலேயே, காணாமல் போனவர்களின் ஒருவருடைய சடலம் மதுரங்குளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொடுவா கடல் பகுதியில் கரை ஒதுங்கிய நிலையில் செவ்வாய்க்கிழமை(22) மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட சடலம் திடீர் மரண விசாரணையின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மதுரங்குளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, காணாமல் போன 40 வயதுடைய மற்றைய மீனவரைத் தேடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தீயில் கருகி ஒருவர் மரணம்

நாரஹேன்பிட்டி - 397 தோட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் புதன்கிழமை (23) அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தீ பரவல் ஏற்பட்ட வீட்டில் இருந்த ஒருவர் தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வீட்டில் வாடகை அடிப்படையில் வசித்து வந்த சுமார் 50 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தீ பரலுக்கான காரணம் இன்னும் அறியப்படாத நிலையில், சம்பவம் குறித்து நாரஹேன்பிட்டி பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# எல்லை தாண்டிய மீனவர்கள் கைது

இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து திங்கட்கிழமை (21) காலை 88 விசைப்படகுகளில் 400க்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்குச் சென்றனர்.

அதில் இராமேஸ்வரத்தை சேர்ந்த முனியசாமி என்பவருக்குச் சொந்தமான விசைப்படகு தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் இடையே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக அந்த ஒரு படகையும் அதிலிருந்த தங்கராஜ, செல்வம், இருளாண்டி, லிங்கம் ஆகிய நான்கு மீனவர்களையும் கைது செய்து மன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

முதற்கட்ட விசாரணையை முடித்துக் கொண்டு மீனவர்கள் நான்கு பேரையும் மன்னார் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படைத்துள்ளதாக இலங்கை கடற்படையின் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் இதுவரை இராமேஸ்வரத்தை சேர்ந்த 25 விசைப்படகுகளும், அதிலிருந்த 185 மீனவர்களும் இலங்கை கடற்படையால் எல்லை தாண்டி மீன் பிடித்ததற்காகக் கைது செய்யப்பட்டிருப்பதாக இலங்கை கடற்படையினர் அதிகாரப்பூர்வமாகத் தெரிவித்துள்ளனர்.

# இழப்பைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

கடந்த மூன்று ஆண்டுகளில் கிட்டத்தட்ட 1500 மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியதாகக் கூறப்பட்டது. இதனால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பு 1250 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமாகும். ஏனெனில் இந்த மருத்துவர்கள் இலங்கை கல்வி முறை மூலம் பிறந்தவர்கள், இதற்கான பணம் பொதுமக்களின் வரிப் பணத்தால் வழங்கப்பட்டது என்பது இரகசியமல்ல. எனவே, பொது வரிப் பணம் மற்றும் இலவசக் கல்வி மூலம் தொழில்முறை தகுதிகளைப் பெற்றவர்கள் தங்கள் நாட்டு மக்களுக்காகப் பணியாற்ற வேண்டிய கடமையைக் கொண்டுள்ளனர்.

கடினமான கிராமப்புறங்களில், மருத்துவமனைகளில் சிறப்பு மருத்துவர்கள் இல்லாத சூழ்நிலை உள்ளது, காய்ச்சல் மற்றும் சளிக்கு மருந்து இல்லை. வளர்ச்சியடையாத கிராமப்புறங்களில் இன்னும் நிலைமை இதுதான். இதுபோன்ற சூழ்நிலையில், சில மருத்துவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு குடியுரிமை பெற்றுள்ளனர்.

இலங்கை கல்வி முறையில் ஒரு மருத்துவரை உருவாக்க அரசாங்கம் கிட்டத்தட்ட ஒரு லட்சம் ரூபாய் செலவிட வேண்டியுள்ளது என மத்திய வங்கி அறிக்கைகளில் கூறப்பட்டுள்ளது, . கடந்த காலங்களில் நாட்டை விட்டு வெளியேறியவர்களில் மிக அதிக எண்ணிக்கையிலான மருத்துவர்கள் காணப்பட்டுள்ளனர்.

மருத்துவர்கள் நாட்டிற்குச் சென்று அந்த நாடுகளில் குடியேறுவதற்கான மனித உரிமையை நாம் ஏற்றுக்கொண்டாலும், மொத்தமாகவும் கூட்டமாகவும் நாட்டை விட்டு வெளியேறி இலங்கையின் சமூக அமைப்பைச் சுகாதார நெருக்கடியில் ஆழ்த்தும் பிரச்சினையை ஆழமாக விவாதிக்க வேண்டும்.

முதலில், இந்த மருத்துவர்களுக்கு குடிமை சமூகப் பொறுப்பு குறித்த புரிதல் வழங்கப்பட்டால், அவர்கள் தங்கள் சொந்த தாய்நாட்டிற்குப் பதிலாக ஒரு வெளிநாட்டு நாட்டைத் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்புகள் குறைக்கப்படும். மேலும், இலங்கையில் இலவசக் கல்வி மூலம் யாராவது தகுதி பெற்று வேறொரு நாட்டிற்கு சேவைகளை வழங்கினால், அது தொடர்பாக ஒரு குறிப்பிட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் வகுக்கப்பட வேண்டும். ஏனென்றால், வெளிநாட்டு குடிமக்களுக்கு சிகிச்சையளிக்க நாட்டு மக்கள் வரி செலுத்தவில்லை.

எனவே, இலவச சுகாதார சேவைகள் மற்றும் சுகாதாரக் கல்வியின் நிலைத்தன்மையைப் பராமரிக்க அவசர ஆதார அடிப்படையிலான தலையீடு தேவை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இது ஒரு குறிப்பிட்ட சமூக அறிவுசார் அணுகுமுறையுடன் செய்யப்பட வேண்டிய பணியாகும்.

வேலைக்காக வெளிநாடு செல்வது, வேறொரு நாட்டில் குடியேறுவது, மேலதிக கல்விக்காக வெளிநாடு செல்வது போன்றவை ஒரு தனிப்பட்ட மனித உரிமை என்றாலும், அரசாங்கத்திற்கும் வரி செலுத்துவோருக்கும் ஏற்படும் இழப்பைக் குறைக்க நடவடிக்கை எடுப்பது அரசாங்கத்தின் மற்றும் அதிகாரிகளின் பொறுப்பாகும்.

இது ஒரு முறையான சட்ட அமைப்பு மற்றும் நெறிமுறை கடமைகளின் தொகுப்பை உள்ளடக்கியிருக்க வேண்டும். இந்த பிரச்சினையில் உணர்திறன் கொண்ட சமூக ஆர்வலர்கள், முதுகலை கல்விக்காக வெளிநாடு சென்றவர்களை மீண்டும் அழைத்து வரப் பத்திரங்களை வலுப்படுத்துதல், இரட்டை குடியுரிமையை ஒரு உத்தியாகப் பயன்படுத்துதல், இரட்டை வரி ஒப்பந்தங்களில் நுழைதல் மற்றும் மருத்துவத் திறன்களைத் தக்கவைக்க வேலை நிலைமைகள் மற்றும் பயிற்சி உள்கட்டமைப்பில் முதலீடு செய்தல் ஆகியவற்றைச் செய்ய முடியும் என்று நம்புகிறார்கள்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

யாவருக்கும் சுயபுத்தி உண்டு. வாழ்கையில் புது, புது அனுபவங்களூடாக வருகின்ற பகுத்தறிவை, மிகவும் நுட்பமாக பொருத்தமான இடங்களில் பிரயோகிப்பதே சுய புத்தியாகும்.

எல்லா விடயங்களையும் சொல்லிக் கொடுத்தபடி இருக்க முடியாது. பல விடயங்களை நாங்கள் தேட வேண்டியுள்ளது.

மேலும் தனது முழு முயற்சியுடன் நல்ல முடிவை அறிவதே மகிழ்ச்சிகரமானது. கால மாற்றங்கள் அறிவை, அதன் தேவைகளை எமக்கு உணர்த்தியே தீரும்.

அச்சப்படுவதால் மனிதன் முடிவை எடுக்கத் தயங்குகின்றான். தோல்விகளால் மனிதன் எழுவது எப்படி என உண்மையைத் தனது சுய அனுபவத்தால் அறிந்து கொள்கின்றான்.

உலகில் பல அச்சரியங்கள் நடந்த வண்ணம் இருக்கின்றன. அத்துடன், பேரழிவுகள், யுத்தங்கள், பஞ்சம் என பல இடர்களை சந்திக்காமல் இருக்கமுடியாது. உலகம் முழுவதிலும் எதுவும் நடக்கலாம். இவற்றைக் கடந்து செல்வதே மனித வாழ்க்கை. சக்தி, துணிவுடன் இயங்குக.

– பருத்தியூர் பாலா.வயிரவநாதன்

தமிழ்மக்களின் பிரச்சினைக்கு

# தீர்வு கிடைக்கும் வாய்ப்புக்கள் இல்லை

முருகானந்தன் தவம்

இலங்கை வரலாற்றில் 1983 ஜூலை 23ஆம் திகதி தமிழர்களை அழித்தொழிக்கும் அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்ட நாள். இலங்கையின் தலைநகர் கொழும்பு உட்பட நாட்டில் சிங்களவர்களுடன் தமிழர்கள் இணைந்து வாழ்ந்த பகுதிகள் எங்கும் ஓடிய தமிழர்களின் குருதியும் பறிக்கப்பட்ட உயிர்களும் கொளுந்து விட்டெறிந்த தமிழர் சொத்துக்களும், இதயங்களை உறைய வைத்த கொடூர தாக்குதல்களும் உயிருடன் கொளுத்தப்பட்டவர்களின் கதறலும், காடைக் கும்பல்களால் கூட்டாக வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட தமிழ் பெண்களின் அபயக் குரல்களும் இலங்கை தலைநகர் வீதிகளை நிறைத்த அந்த நாளை எப்படி மறக்க முடியும்? வருடத்தின் 12 மாதங்களில் 'கறுப்பு ஜூலை'யாக தமிழர் குருதி குடித்த மாதமாகத் தமிழர் மனங்களில் ஆழமாகவும் ஆறாத ரணமாகவும் பதிந்துவிட்ட அந்த தமிழினப் படுகொலை நடந்து ஜூலை 23ஆம் திகதியுடன் 42 ஆண்டுகள் ஆகிவிட்டன. வாகனங்களில் சென்ற தமிழர்களை வழிமறித்து உயிரோடு எரித்துக் கொன்று நடனமாடிய சம்பவங்கள், வாக்காளர் பட்டியலை வைத்துத் தமிழர்களை அடையாளம் கண்டு வீடுகளிலிருந்து இழுத்தெறிந்து வெட்டித் துண்டாடிய காட்சிகள், பெற்றோருக்கு முன்பாக மகள்களும் கணவர்களுக்கு முன்பாக மனைவிகளும் சகோதரர்களுக்கு முன்பாக சகோதரிகளும் சிங்களக் கும்பல்களினால் நிர்வாணமாக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்ட, வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட கொடூரங்களும் கடைகளில் தமிழனின் கறி கிடைக்கும் என பலகையில் எழுதி வைத்து எக்காளமிட்ட கோரங்களும் இன்று நினைத்தாலும் உடல் நடுங்க வைத்து விடும். தமிழ் மக்களுக்கு எதிராக 1956, 1958, 1977, 1981 ஆகிய ஆண்டுகளில் பேரினவாதிகளினதும், பேரின ஆட்சியாளர்களினதும் ஆசிர் வாதத்துடன் முன்னெடுக்கப்பட்ட இனக் கலவர வன்முறைச் சம்பவங்களின் போக்கில், அடுத்த கட்டமாகவே, 1983 கறுப்பு ஜூலை இனக்கலவர படுகொலைகள் அரங்கேற்றப்பட்டன. 1983 ஜூலை 23, 24, 25, 26 ஆகிய தினங்களில் திட்டமிட்டு தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட 'ஜூலைக் கலவரம்' எனப்படும் தமிழினப்படுகொலை இலங்கைத் தமிழர்களின் மனங்களில் ஆறாத ரணமாக, தீராத வலியாகக் கனன்று கொண்டிருக்கின்றது.

இந்த ஜூலைக் கலவரம் நடந்தேறி 42 வருடங்கள் கடந்து விட்டாலும் அது தமிழரின் மனத்தோடு ஆழமாகப் பதிந்து விட்டது. ஒவ்வொரு வருடமும் வரும்போதும் ஜூலை என்றதுமே தமிழரின் மனங்களில் 83இன் தமிழர்களின் இரத்தக் கறைபடிந்த கறுப்பு ஜூலை நினைவிற்கு வந்து கலங்க வைப்பதைத் தவிர்க்க முடியாது. ஜனநாயகத்தின் அடிப்படையில், இனங்களுக்கிடையில் வேறுபாட்டை நோக்காத நேர்மையான சிங்களவர்களின் மனசாட்சிகளை இருளாக்கிய அந்த 'ஜூலைக் கலவரம்' எனப்படும் தமிழினப்படுகொலையே 30 வருட யுத்தத்துக்கு வழிகோலி இலட்சக்கணக்கான உயிர்களைப் பலியெடுத்ததுடன், உடைமைகளை அழித்து இலட்சக்கணக்கான தமிழர்களை அகதிகளாக்கி, சிங்களவர், தமிழர்களை இன்றுவரை பரம எதிரிகளாகவும் இணக்கப்பாட்டுக்கு வர முடியாதவர்களாகவும் வைத்திருக்கின்றது.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் இடம்பெற்ற விடுதலைப் புலிகளின் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதன் எதிரொலியாக தலைநகர் கொழும்பில் வாழ்ந்த தமிழர்களுக்கு எதிராக இந்த தமிழினப்படுகொலை அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்டது.தமிழ் மக்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் பல சூறையாடப்பட்டு, கொழும்பு நகரின் அனைத்து தெருக்களிலும் இயங்கிய தமிழ் வர்த்தகர்களின் வியாபார நிலையங்கள், தமிழர்களின் வீடுகள் மற்றும் வாழ்விடங்கள், வாகனங்கள் என்பன அடித்து நொறுக்கப்பட்டுத் தீக்கிரையாக்கப்பட்டு அழித்தொழிக்கப்பட்டன . வீதியில் சென்றோர், வீடுகளில் இருந்தோர், வயோதிபர், பெண்கள், சிறுவர்கள், நடுத்தர வயதினர் என பாகுபாடின்றி ஆயிரக்கணக்கானோர் தமிழர்கள் என்ற ஒரே காரணத்தால் துடிக்கத் துடிக்கக் கொல்லப்பட்டனர். தீயிட்டு எரிக்கப்பட்டனர்.

தமிழினப் படுகொலையில் ஈடுபட்ட சிங்களக் காடைக்கூட்டத்துக்கு சட்ட ரீதியான முகமூடியையும் இராணுவ, பொலிஸ் ஒத்துழைப்பையும் வழங்கும் பொருட்டு அவசரக்கால சட்டம் பயன்படுத்தப்பட்டது. அது மட்டுமன்றி, கொலை செய்யப்பட்டவர்களை மரண அல்லது நீதி விசாரணை இல்லாமல் தகனம் செய்ய பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் அதிகாரத்தை வழங்கும் சட்டங்கள் அமுல் செய்யப்பட்டன. தமிழினப் படுகொலைகளைத் தலைநகரில் ஆரம்பிப்பதற்கென முன்கூட்டியே தயார் செய்யப்பட்டது. இதற்காகவே யாழ்., திருநெல்வேலியில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் சடலங்கள் கொழும்பு கனத்தையில் தகனம் செய்யப்படுமென அரசு அறிவித்தது. அது சிங்களக் காடையர்கள் தமிழினப் படுகொலைக்காக அணிதிரள விடுக்கப்பட்ட அரசின் ஒரு உத்தியோகபூர்வ அழைப்பாகவே இருந்தது.

ஜூலை 23ஆம் திகதியில் இருந்து காடையர் கும்பல்களும் அவர்களுடன் இணைந்து தமிழினப் படுகொலைகளில் ஈடுபட்ட பொலிஸாரும் இராணுவமும் ஒன்றரை நாட்கள் சுதந்திரமாகத் தமிழர்களைத் தேடித் தேடிக் கொல்லவும் தமிழ் பெண்களை பாலியல் வல்லுறவு செய்யவும், தமிழர் சொத்துக்களை அடியோடு அழிக்கவும் இடமளித்ததன் பின்னர், ஜூலை 25ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கே ஜனாதிபதி கொழும்பில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. ஏனைய மாவட்டங்களுக்கும் செல்லுபடியான விதத்தில் அன்று மாலை 6 மணிக்கே ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது . முதலில் கொழும்பிலும் பின்னர் மேல் மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம், சிங்களக் காடையர்கள் மாகாணங்களுக்குள் ஊடுருவி தமது படுகொலைகளை முன்னெடுக்க வழங்கப்பட்ட ஒரு அரச ஆணையாகவே இருந்தது. ஜூலை 26ஆம் திகதி கண்டி, நுவரேலியா, திருகோணமலை, குருநாகல், இரத்தினபுரி, பலாங்கொடை முதலான பிரதேசங்களில் தமிழ் மக்களுக்கு எதிராக தமது காடைத்தனங்களை அரங்கேற்றினர். திருகோணமலை சந்தை தரைமட்டமாக்கப்பட்டது.

சிங்களவர்களின் அரக்கத்தனம் முதலில் கொழும்பை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டாலும், அதன் பின்னர். ஏனைய நகரங்கள், மத்திய மலைநாட்டுப் பகுதியில் என தொடர்ந்து ஏழு நாட்களாக அரங்கேற்றப்பட்டன. அது மட்டுமன்றி, கொழும்பு - வெலிக்கடை சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளான தங்கத்துரை, குட்டிமணி உள்ளிட்ட 53 தமிழர்கள் பொலிஸார், சிறைக் காவலர்களின் ஒத்துழைப்புடன் சிங்களக் கைதிகள் , காடையர்களினால் கண்கள் தோண்டப்பட்டும் கொடூர சித்திரவதைகள் செய்யப்பட்டும் படுகொலை செய்யப்பட்டனர்.இந்த தமிழினப்படுகொலையால் தலைநகரில் உள்ள பாடசாலைகள், கோவில்கள் தமிழ் அகதிகளால் நிரம்பி வழிந்தன. ஆயிரக்கணக்கான தமிழர்களைக் கப்பலேற்றி "உங்கள் நாட்டுக்கு செல்லுங்கள்" என கூறி யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டனர். இந்நிலையில், பெரும்பாலான தமிழர்கள் நாட்டை விட்டும் வெளியேறினர்.

ஜூலை 23இல் ஆரம்பித்த தமிழினப்படுகொலை மாதத்தின் இறுதி வரை நீண்டு சென்றது. 83 கலவரம் என்ற பெயரில் நடந்த தமிழினப் படுகொலையில் 3,000 பேர் வரையானோர் உயிரிழந்திருக்கக் கூடும் எனவும், பத்தாயிரத்திற்கும் அதிகமான தமிழர்களின் வாழ்விடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன எனவும், கோடிக்கணக்கான சொத்துக்கள் சூறையாடப்பட்டன அல்லது அழிக்கப்பட்டன எனவும் தரவுகள் கூறுகின்றன. தமிழர்களை அழிக்க வெறியோடு ஒரு கூட்டம் விரட்டினாலும், அதே சிங்கள இனத்தைச் சார்ந்த மனிதாபிமானம் உள்ளவர்களினால் துணிவோடு பல தமிழர்கள் காப்பாற்றப்பட்டமையும் பல சிங்களக் குடும்பங்கள் தமது வீடுகளில் தமிழர்களுக்கு அடைக்கலம் கொடுத்து உதவியமையும் இன்றும் தமிழர்களால் நன்றியுடன் நோக்கப்படுகின்றது.

இராணுவத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கும், இராணுவத்தினர் உயிரிழந்தமைக்கும் அளிக்கப்பட்ட முக்கியத்துவம், பொதுமக்கள் பாதிக்கப்பட்ட சமபவங்களுக்கு அளிக்கப்படவில்லை. அந்த சம்பவங்கள் பற்றிய தகவல்கள் இருட்டடிப்பு செய்யப்பட்டிருந்தன. அதனால் ஊடகங்களின் ஊடாக உண்மை நிலைமையை உடனுக்குடன் அறிய முடியா சூழல் ஏற்பட்டிருந்தத்து. அப்போது கொழும்பில் இருந்த வெளிநாட்டு செய்தியாளர்கள் கடுமையாகக் கண்காணிக்கப்பட்டார்கள். அவர்கள் தங்களுடைய ஹோட்டல் அறைகளில் இருந்து வெளியில் வருவதற்கும் சில நாட்கள் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. கட்டுப்பாடுகளை மீறிச் செயற்பட்ட வெளிநாட்டுச் செய்தியாளர்கள் நாட்டில் இருந்து வெளியேற்றப்பட்டனர் .

இந்த 1983 ஜூலை கலவரம் என்ற பெயரில் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட தமிழினப்படுகொலையே பல வரலாறுகளை எழுதியது. பல வரலாறுகளை மாற்றியது. தமிழர்களின் ஆயுதப் போராட்டம் விடுதலைப்புலிகள் தலைமையில் தீவிரம் அடைவதற்கு ஜூலைக் கலவரம் பிரதான காரணமாக அமைந்தது. தமிழர்கள், பெரும்பான்மையினமான சிங்களவர்கள் மேல், சிங்கள ஆட்சியாளர்கள் மேல் நம்பிக்கையிழந்தனர். இந்த நாட்டிலே சிங்களவர்-தமிழர்கள் ஒன்றாக இணைந்து வாழ முடியாது என்கின்ற நிலைமையை ஜூலைக் கலவரம் ஏற்படுத்தியது. அந்த நிலைதான் இன்றுவரை தொடர்கின்றது.

கறுப்பு ஜூலையின் பின்னர் தேசிய பிரச்சினை என்பது இலங்கை அரசியலில் ஏனைய விடயங்களை விட பிரதான பிரச்சினையாகப் பார்க்கப்பட்டது. 42 வருடங்களுக்கு முன்னர் அப்போதைய அரசினால் திட்டமிட்டு நடத்தப்பட்ட தமிழினப் படுகொலைக்கு இதுவரை நீதி கிடைக்காதது போலவே இலங்கையின் தேசியப் பிரச்சினையாக மாறிய தமிழ்மக்களின் பிரச்சினைக்கும் இதுவரை தீர்வு கிடைக்கவில்லை. கிடைக்கும் வாய்ப்புக்களும் இல்லை.

## கடிதங்கள்

### வீதி, வீடுகளில் பாரிய விரிசல்

தலவாக்கலை பேருந்து நிலையத்திற்கு மேலே உள்ள தலவாக்கலை பண்டாரநாயக்க சதுக்கத்தில் வசிக்கும் 6 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 30 பேர், அவர்களின் வீடுகளுக்குச் செல்லும் வீதிகளில் ஏற்பட்டுள்ள சரிவு அபாயத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தங்களது வீடுகள் மற்றும் வீடுகளுக்குச் செல்லும் வீதி சிறிது காலமாகவே இவ்வாறு காணப்படுவதாகவும் சமீபத்திய நாட்களில் அப்பகுதியில் பெய்த கனமழையால் இந்த சரிவு மேலும் கூடியுள்ளதாகவும் பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

தலவாக்கலை, லிந்துலை நகர சபையின் ஏற்கெனவே இருந்த ஆட்சியாளர்கள் அனைவரும் இதற்குத் தீர்வு வழங்குவதாக உறுதியளித்த போதும், அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை.

அத்துடன், தேசிய மக்கள் சக்தியின் தற்போதைய ஆட்சியாளர்களும் இது குறித்து விசாரிக்க வரவில்லை என்றும் பாதிக்கப்பட்ட குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர்.

வீடுகளின் சுவர்கள் மற்றும் வீதிகளில் கடுமையான விரிசல் ஏற்பட்டுள்ளது. அத்துடன், விரிசல்கள் வழியாகக் மழைநீர் கசிவதைத் தடுக்க பொலித்தீன் மூலம் மூடியிருப்பதைக் காணமுடிந்தது.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச வாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– ரஞ்சித் ராஜபக்ஷ

# அல் மதீனாவுக்கு நூல்கள் அன்பளிப்பு



கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட கேணிநகர் அல் மதீனா வித்தியாலய நூலகத்திற்கு பயனுள்ள நூல்கள் புதன்கிழமை (23) அன்று அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

கபூர் மௌலவி லெஜெஸி பாத் அமைப்பின் ஏற்பாட்டில் மர்ஹூம் கபூர் மௌலவியின் குடும்பத்தினரால் நூல்கள் பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம்.றிஸ்மினிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

- எச்.எம்.எம்.பர்ஸான்

# ‘மக்களின் பணம் மக்களுக்காக’





காரைதீவு பிரதேச சபை தவிசாளர் எஸ்.பாஸ்கரனின் ‘மக்களின் பணம் மக்களுக்காக’ நிகழ்ச்சித் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வாக நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு காரைதீவு சுவாமி விபுலானந்தர் கலாச்சார மண்டபத்தில் புதன்கிழமை (23) அன்று காரைதீவு பிரதேச சபை தவிசாளர் எஸ்.பாஸ்கரனின் தலைமையில் நடைபெற்றது.

தனது சேவை காலத்தில் கிடைக்கும் பிரதேச சபை கொடுப்பனவுகளை காரைதீவில் கல்வியையும், காரைதீவு மண்ணின் மாண்பையும் மேம்படுத்த ‘மக்களின் பணம் மக்களுக்காக’ நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் செலவழிக்க உள்ளதாக எஸ். பாஸ்கரன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் முன்னாள் உப தவிசாளரும், பிரதேச சபை உறுப்பினருமான ஏ.எம். ஜாஹீர், காரைதீவு பிரதேச சபை உறுப்பினர்களான ஏ.ஆர்.எம்.ஹில்மி, சின்னத்தம்பி சிவகுமார், கிருஷ்ணபிள்ளை செல்வராணி, சவுந்தரம் சுலஸ்தனா, அபூபக்கர் பர்ஹான், காரைதீவு பிரதேச சபை செயலாளர் அ.சுந்தரகுமார், பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

- நூருல் ஹுதா உமர்

# “விளையாடுவதற்கு இடமளியுங்கள்”



முன் பிள்ளை பருவ அபிவிருத்தி மற்றும் பராமரிப்புக்கான தேசிய வாரத்தின் 2025ஆம் ஆண்டுக்கான ஏழாம் நாள் நிகழ்வு ‘சிறுவர் நாம் உலகை வெல்ல விளையாடுவதற்கு இடமளியுங்கள்’ எனும் கருப்பொருளில் கொண்டாடப்பட்டது.

குறித்த இந்நிகழ்வு முன் பிள்ளை பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகத்தின் நிதி பங்களிப்புடன் திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் கிழக்கு மாகாண பாலர் பாடசாலை கல்விப் பணியகத்தின் ஏற்பாட்டில் செவ்வாய்க்கிழமை (22) அன்று திருகோணமலை மாநகர சபையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் அரங்கேற்றப்பட்டு குளக்கோட்டன் தோப்பு சிறுவர் பூங்காவில் பிள்ளைகளுக்கான மற்றும் பெற்றோர்களுக்கான விளையாட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.

- அ.அச்சுதன்



## பெண்களின் மாதவிடாய் காலத்தில்

# உள ஆரோக்கியத்தின் முக்கியத்துவம்



எம்.எம்.ரஷ்பா,
உளவியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

ாதவிடாய் என்பது பெண்களின் வாழ்க்கையின் இயல்பான ஒரு பகுதியே ஆகும் . இது மாத ந்தோறும் ஓமோன் மா ற்றங்களால் ஏற்படும் ஒரு இயற்கையான செயல்முறை. ஆனால், இதனைச் சுற்றி சமூகத்தில் உள்ள தவறான புரித ல்கள், வெட்கம், ச ங்கடம் மற்றும் தவிர்ப்புகள் பெண்களி ன் உளவியலிலும், சமூக வாழ்விலும் அழுத்தம் விளைவிக்கின்றன. இந்நிலையில், மாதவிடாய் கால உள ஆரோக்கியம் எ ன்பது அதிக முக்கியத்துவம் பெறுகிறது.

### உள ஆரோக்கியம் என்றால் என்ன?

உள ஆரோக்கியம் என்பது ஒருவரின் உணர்வுகள், சிந்தனைகள், பழக்கங்கள் மற்றும் மன நிலைமை ஆகியவற்றின் ஒத்துழைப்பு ஆகும். இது ஒருவர் தனது அன்றாட செயல்களில் நேர்மையாக, மன அழுத்தமின்றி செயல்பட உதவுகிறது. மாதவிடாயின் போது ஏற்படும் மனநிலை மாற்றங்கள், வெட்கம், அச்சம், மற்றும் நம்பிக்கையிழப்பு ஆகியவைகள் உளவியல் ரீதியாக பாதிப்பை ஏற்படுத்துகின்றன.



### மாதவிடாய் கால உள மாற்றங்கள்

மாதவிடாய் என்பது உடலில் ஏற்படும் ஹார்மோன்கள் மாற்றத்தால் நடைபெறும். இதில் ஈஸ்ட்ரஜன் மற்றும் புரொஜெஸ்டிரோன் என்ற இரு முக்கியமான ஹார்மோன்களின் அளவுகள் ஏறிக் குறைவாகின்றன. இதனால் சில பெண்களுக்கு முன் மாதவிடாய் மன அழுத்தம் (PMS), மனச்சோர்வு, கோபம், கவலை, அலுப்பு போன்ற மனவியல் மாற்றங்கள் ஏற்படலாம்.

இதேவேளை, சில பெ ண்கள் உடல் வலிகளையும், ஏக்கத்தையும் அனுபவிக்கிறார்கள். இவை மன அழுத்தத்துடன் சேரும்போது, பாடசாலைக்குச் செல்வதில் தயக்கம், சமூக நிகழ்வுகளில் பங்கேற்பதிலான பயம், நம்பிக்கையிழப்பு போன்ற உளவியல் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும்.

### இலங்கையில் நிலவும் நிலைமை

இலங்கையில், குறிப்பாக கிராமப்புறங்களில், மாதவிடாய் தொடர்பான புரிதல்கள் மிகவும் மோசமாக உள்ளன. பல பாடசாலைகளில் கூட பெண் மாணவர்களுக்குத் தேவையான சுகாதார வசதிகள் இல்லை. 2022ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற ஒரு ஆய்வின் படி, 48% மாணவிகள் பாடசாலையில் மாதவிடாயின் போது குறைவான தகவல் மற்றும் ஆதரவின் காரணமாக மன அழுத்தம் மற்றும் நெருக்கம் ஆகியவற்றை அனுபவிக்கிறார்கள்.

மேலும், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான மாதவிடாய் கல்வி மிகவும் குறைவாகவே வழங்கப்படுகிறது. இதனால், அவர்கள் மாதவிடாய்க்கும் அதன் உளவியல் தாக்கங்களுக்கும் முறையான புரிதலின்றி வளர்கின்றனர். இது அவர்களின் நீண்டகால உளவியல் நிலைமையையும் பாதிக்கக்கூடும்.

### உளவியல் ஆதரவு ஏன் அவசியம்?

மாதவிடாய் என்பது ஒ ரு நோயல்ல, ஆனால், மனநிலை பாதிப்புகள் ஏற்படும்போது, அதை சமாளிக்க உளவியல் ஆதரவு தேவைப்படும். அதற்கான வழிகள்:

* **பாடசாலை மற்றும் சமூக அளவில் விழிப்புணர்வு:** மாதவிடாய் என்பது இயற்கையானது என்ற புரிதலை சிறு வயதிலேயே சிறுமிகளுக்கும் சிறுவர்களுக்கும் அளிக்க வேண்டும்.

* **உண்மையான தகவல் பகிர்வு:** தவறான நம்பிக்கைகளை தவிர்த்து, அறிவியல் அடிப்படையிலான தகவல்களை பாடசாலை கல்வி பாடத் திட்டத்தில் சேர்க்க வேண்டும்.

* **உணர்வுப் பகிர்வு மற்றும் ஆலோசனை:** மன அழுத்தத்தை சமாளிக்க மாணவியருடன் தொடர் கலந்துரையாடல்கள், ஆலோசனைகள், மற்றும் குழு ஆதரவு வழங்க வேண்டும்.

* **பெண்களுக்கான பாதுகாப்பான இடங்கள்:** மாதவிடாயின் போது, பள்ளிகளிலும் வேலைவாய்ப்புகளிலும் பெண்கள் தங்களை பாதுகாப்பாகவும், நம்பிக்கையுடன் இருக்க வேண்டியது முக்கியம்.

மாதவிடாய் கால உள ஆரோக்கியம் என்பது உடல் ஆரோக்கியத்திற்கும் சமமான முக்கியத்துவம் கொண்டது. பெண்கள் தங்களது உணர்வுகளை வெளிப்படுத்தும் உரிமையை பெற்றிருக்க வேண்டும். தவறான புரிதல்கள் மற்றும் சமூக அழுத்தங்கள் மன அழுத்தத்திற்கு வழிவகுக்கும் என்பதால், குடும்பம், பாடசாலை, சமூகங்கள் மற்றும் அரசாங்கம் ஒருமித்தமாக செயல்படவேண்டும்.

இலங்கையில் மாதவிடாய் கான உளவியல் நெருக்கங்களை குறைக்கும் நோக்கில் கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக வேலைத்துறை இணைந்து செயல்படுவது காலத்தின் தேவை. உணர்வுகளை புரிந்து, ஆதரித்து, நிலையான சூழலை உருவாக்குவதே உண்மையான முன்னேற்றம்



வொஷிங்டன்

“பொருளாதாரத்தை அழிப்போம்”

# இந்தியா, சீனாவுக்கு அமெரிக்கா மிரட்டல்

ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதை நிறுத்தாவிட்டால், இந்தியா மற்றும் சீனாவின் பொருளாதாரத்தை வரி விதித்து நசுக்குவோம் என அமெரிக்க குடியரசு கட்சியின் எம்.பி. லிண்ட்சே கிரஹாம் மிரட்டல் விடுத்துள்ளார்.

ரஷ்யா- உக்ரைன் இடையே 2022இல் ஆரம்பித்த போர், தற்போது வரை நீடிக்கிறது. இதனால் ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பல பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.

இதனால் உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலை நிறுத்துவதற்காக, அந்நாட்டின் பொருளாதாரத்தை பலவீனப்படுத்தும் முயற்சியில்



அமெரிக்கா இறங்கியுள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவின் ஆளும் குடியரசு கட்சியின் மூத்த எம்.பி. லிண்ட்சே கிரஹாம், ரஷ்யாவுடன் இந்தியா, சீனா ஆகிய நாடுகள் வர்த்தக உறவை நிறுத்தவில்லை எனில், அந்நாடுகளின் பொருளாதாரத்தை அழிப்போம், என தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் பகிரங்கமாக மிரட்டல் விடுத்துள்ளார்.

இது குறித்து மேலும் அவர் கூறியுள்ளதாவது, ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்கும் நாடுகளின் மீது அதிபர் டிரம்ப் வரி விதிக்கப் போகிறார். ரஷ்யாவின் கச்சா எண்ணெய் ஏற்றுமதியில் சுமார் 80 சதவீதத்தை சீனா, இந்தியா மற்றும் பிரேசில் ஆகிய மூன்று நாடுகள் வாங்குகின்றன.

இது புட்டினின் இராணுவத்தை இயங்க வைக்கிறது. எனவே, புட்டினுக்கு உதவுவதற்காக இந்த நாடுகளின் மீது டிரம்ப் 100 சதவீத வரி விதிக்கப் போகிறார்.

இந்த மூன்று நாடுகளுக்கும் நான் கூறுவது இதுதான் நீங்கள் இந்தப் போரைத் தொடர அனுமதிக்கும் வகையில், மலிவாக கிடைக்கும் ரஷ்யாவின் கச்சா எண்ணெய்யை வாங்கினால், நாங்கள் உங்கள் பொருளாதாரத்தை அழித்து விடுவோம். இந்த வர்த்தகத்தில் இரத்த கரை படிந்துள்ளது என்றார்.

பாகிஸ்தான்

பாகிஸ்தானை உலுக்கிய

# ஆணவக் கொலை



பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் இளம் ஜோடி ஆணவக்கொலை செய்யப்பட்ட வீடியோ அதிர்வலையை ஏற்படுத்தி வருகிறது.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தைச் சேர்ந்த இளம் ஜோடி தங்களது வீட்டாரின் எதிர்ப்புகளை மீறி காதல் திருமணம் செய்து கொண்டனர். இதுதொடர்பாக அந்த பெண்ணின் சகோதரர் பழங்குடியினத் தலைவரிடம் புகார் அளித்துள்ளார்.

இதையடுத்து> அவரது உத்தரவின்பேரில் அந்த காதல் ஜோடி ஆணவக்கொலை செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

முன்னதாக அந்த ஜோடியை டிரக்கில் குவெட்டாவின் பாலைவனப் பகுதிக்கு தூக்கிச் சென்ற ஒரு கும்பல் கொடூரமாக சுட்டுக் கொல்லும் வீடியோ சமூக வலைதளங்களில் வெளியாகி பதைபதைப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக உள்ளூர் பழங்குடியினத் தலைவர் சர்தார் சதக்ஸாய் மற்றும் பெண்ணின் சகோதரன் உட்பட 13 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதில், ஆணவக்கொலைக்கு உத்தரவிட்ட உள்ளூர் பழங்குடியினத் தலைவர் ஷேர் பாஸ் சதசாயும் அடங்குவார்.

மனித உரிமைகள் ஆணையத்தின் தகவல்படி, பாகிஸ்தானில் 2024இல் குறைந்தது 405 ஆணவக்கொலைகள் பதிவாகியுள்ளதாக கூறப்படுகின்றது.

கீவ்

“உக்ரைன்– ரஷ்யா

# போர் நிறுத்தும் குறித்து புட்டினை சந்திக்க தயார்”



உக்ரைன் - ரஷ்யா போரை முடிவுக்கு கொண்டு வரும் வகையில், ரஷ்ய ஜனாதிபதி புட்டினை நேரில் சந்தித்து பேச தயாராக இருக்கிறேன்” என உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீது தொடர்ந்து ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்காக ரஷ்யா மீது இன்னும் பொருளாதார தடைகளை விதிக்க வேண்டும் என உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கூறி வருகிறார். அதேநேரத்தில், பேச்சுவார்த்தை மூலம் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் போர் நிறுத்தம் கொண்டு வர முயற்சி செய்கிறார்.

இது தொடர்பில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கூறியதாவது, போரை முடிவுக்கு கொண்டு வர, ரஷ்ய ஜனாதிபதி புட்டினை நேரில் சந்தித்து பேச தயாராக இருக்கிறேன். உக்ரைன் இந்த போரை ஒருபோதும் விரும்பவில்லை. மேலும் போரை தொடங்கிய ரஷ்யா தான் முடிவுக்கு கொண்டு வர வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

பீகார்

வாக்காளர் பட்டியலில் இருந்து

# 51 இலட்சம் பெயர்கள் நீக்கம்



பீகார் வாக்காளர் பட்டியலில் இருந்து சுமார் 52 இலட்சம் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் செவ்வாய்க்கிழமை (22) அன்று அறிவித்துள்ளது.

இதற்கான காரணங்கள் வாக்காளர்களின் இறப்பு மற்றும் இடம்பெயர்வு ஆகும். வரைவு வாக்காளர் பட்டியலில் தகுதியான வாக்காளர்கள் சேர்க்கப்பட்டு ஆகஸ்ட் 1ஆம் திகதி பட்டியல் வெளியிடப்படும் என்று ஆணையம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில், இதுவரை நடத்தப்பட்ட பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்தில் 18 இலட்சம் வாக்காளர்கள் இறந்து விட்டதாகவும், 26 இலட்சம் பேர் வெவ்வேறு தொகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளதாகவும், 7 இலட்சம் பேர் இரண்டு இடங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் செய்யும் தேர்தல் ஆணையத்தின் முடிவை எதிர்த்து எதிர்க்கட்சிகள் தொடர்ந்த வழக்கு தற்போது உச்சநீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது.

புதுடெல்லி

# “இந்தியாவில் 28 கோடி மக்கள் கடனாளிகள்”

## இந்திய அரசு தகவல்

இந்தியாவில் 28 கோடி மக்கள் கடனாளிகளாக உள்ளனர் என இந்திய அரசு தகவல் வெளியிட்டுள்ளது.


இந்தியாவில் 140 கோடிக்கும் அதிகமான மக்கள் உள்ளனர். இவர்களின் கடன் விவரங்கள் குறித்து எம்.பி.க்கள் பாராமன்றத்தில் கேள்வி எழுப்பயுள்ளனர்.

அதற்கு இந்திய அரசு எழுத்து பூர்வமாக பதிலளித்துள்ளது. அதன் விவரம் வருமாறு,

கடந்த மார்ச் மாதம் நிலைவரப்படி கிரெடிட் தகவல் நிறுவனமான சிபில் தெரிவித்ததின்படி, இந்தியாவில் சுமார் 28 கோடி மக்கள் தனிப்பட்ட கடனாளிகள் உள்ளனர்.

இவர்களுக்கான சராசரி கடன் ரூ.4.8 இலட்சமாக உயர்ந்துள்ளது. இது 2023இல் ரூ.3.9 இலட்சமாக இருந்தது.

ஆனால், இது மொத்த மக்கள்தொகையைக் கருத்தில் கொண்ட சராசரி கடன் அல்ல. மேலும், இந்த கடன்களில் பெரும்பாலானவை உயர் கிரெடிட் மதிப்பெண் உள்ள நபர்களுக்கே வழங்கப்பட்டவை. அவர்கள் பெரும்பாலும் சொத்து உருவாக்க குறித்த கடன்களையே எடுத்துள்ளனர். குடும்ப நிதி சொத்துகள் ஜி.டி.பி.யுடன் ஒப்பிடும்போது, 2023இல் 103.5 சதவீதம் இருந்தது. 2024இல் 106.2 சதவீதம் ஆக உயர்ந்துள்ளது.



இது மக்கள் நிதி நிலை மேம்பட்டிருப்பதை காட்டுகிறது. இந்தாண்டில் இந்தியாவின் வெளிநாட்டு கடன் ரூ.61.47 இலட்சம் கோடியாகும். இது கடந்த ஆண்டைவிட 10.1 சதவீதம் அதிகம்.

ஆனாலும், வெளிநாட்டு கடன் ஜி.டி.பி. விகிதம் 19.1 சதவீதம் மட்டுமே என்பதால், இது சீராகவே கட்டுப்பாட்டில் உள்ளது என கூறப்பட்டுள்ளது.

இரண்டாவது போட்டியிலும்

# மேற்கிந்தியத் தீவுகளைத் தோற்கடித்த அவுஸ்திரேலியா



மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இரண்டாவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியிலும் அவுஸ்திரேலியா வென்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் ஏற்கெனவே வென்ற அவுஸ்திரேலியா, ஜமைக்காவில் புதன்கிழமை (23) அன்று நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் களத்தடுப்பிலீடுபடத் தீர்மானித்தது. அவுஸ்திரேலியா சார்பாக மத்தியூ குனுமென் இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் அறிமுகத்தை மேற்கொண்டார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், பிரெண்டன் கிங்கின் 51 (36), அன்ட்ரே ரஸலின் 36 (15) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், அடம் ஸாம்பா 4-0-29-3, கிளென் மக்ஸ்வெல் 2-0-15-2, நாதன் எலிஸ் 4-0-34-2, பென் டுவார்ஷுயிஸ் 4-0-37-1, மத்தியூ குனுமென் 4-0-33-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 173 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, ஜொஷ் இங்லிஸின் ஆட்டமிழக்காத 78 (33), கமரன் கிறீனின் ஆட்டமிழக்காத 56 (32) ஓட்டங்களோடு 15.2 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சுல் அகீல் ஹொஸைன் 4-0-31-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக இங்லிஸ் தெரிவானார்.

கிரிக்கெட்டில் சாதித்த

# விருதோடை வீரருக்கு வாழ்த்து மழை

எம்.யூ.எம்.சனூன்




வட மேல் மாகாண கிரிக்கெட் அணியில் இணைந்து சாதனை நிலை நாட்டிய புத்தளம் மதுரங்குளி விருதோடை கிராமத்தை சேர்ந்த எம்.ஏ.எம்.அஸீமுக்கு பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் குவிந்த வண்ணமுள்ளன.

தேசிய கிரிக்கெட் போட்டியில் வடமேல் மாகாண (வயம்ப) அணி இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளது. இந்த அணியில் விருதோடை கிராமத்தைச் சேர்ந்த அஸீம் இணைந்து தனது அபார திறமையை வெளிப்படுத்தி இருந்தார்.

அஸீம், தனது விருதோடை கிராமத்திலும், அயல் கிராமங்களிலும் பிரபலமான அணிகளோடு இணைந்து சிறப்பான முறையில் தனது அபார திறமைகளை வெளிக்காட்டி விளையாடியதன் மூலம் அனைவரையும் கவர்ந்து வடமேல் மாகாண அணி சார்பில் விளையாடுவதற்கான வாய்ப்பைப் பெற்றிருந்தார்.

இவர் தொடர்ந்தும் சிறப்பான ஆட்டங்களை வெளிப்படுத்தி கிரிக்கெட் துறையில் சிகரம் எட்ட வேண்டும் எனவும், எதிர்காலத்தில் மேலும் பல சாதனைகள் புரிய வேண்டும் எனவும் விருதோடை ஐக்கிய இளைஞர் கழகம் உள்ளிட்ட பொதுமக்களும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

அவுஸ்திரேலிய சிட்னி சிக்ஸஸை

# வென்றது திருகோணமலை யங் ஒலிம்பிக்ஸ் மாஸ்டர்ஸ்




அ.அச்சுதன்

திருகோணமலை இந்துக் கல்லூரி மைதானத்தில் சனிக்கிழமை (19) அன்று நடைபெற்ற வருகை அவுஸ்ரேலியா சிட்னி சிக்ஸஸ் அணியுடனான 40 ஓவர்களைக் கொண்ட கடினப்பந்துப் போட்டியில் திருகோணமலை யங் ஒலிம்பிக்ஸ் மாஸ்டர்ஸ் அணி வென்றது.

இப்போட்டியை சிட்னி சிக்ஸஸுடன் தொடர்பு கொண்டு யங் ஒலிம்பிக்ஸ் மாஸ்டர்ஸ் அணித்தலைவரும் ஆகிய க. ரஜனிகாந்த் சிறப்பாக ஒழுங்கு படுத்தியிருந்தார்.




முத்தரப்புத் தொடர்:

# தென்னாபிரிக்காவை வீழ்த்திய நியூசிலாந்து

சிம்பாப்வே பங்கேற்கும் முத்தரப்பு இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில், ஹராரேயில் செவ்வாய்க்கிழமை (22) அன்று நடைபெற்ற தென்னாபிரிக்காவுடனான போட்டியில் நியூசிலாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: நியூசிலாந்து.

தென்னாபிரிக்கா: 134/8 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: றீஸா ஹென்ட்றிக்ஸ் 41 (37), ஜோர்ஜ் லின்டி ஆ.இ 23 (15) ஓட்டங்கள். பந்துவீச்சு: அடம் மில்ன் 2/21 [4], மிற்செல் சான்ட்னெர் 2/26 [4], ஜேக்கப் டஃபி 2/33 [4]), வில் ஓ'ரூர்க் 1/26 [4], ஸகரி போஃக்ஸ் 0/12 [3])

நியூசிலாந்து: 135/3 (15.5 ஓவ.) (துடுப்பாட்டம்: டிம் செய்ஃபேர்ட் ஆ.இ 66 (48) ஓட்டங்கள்.




பந்துவீச்சு: செனுரன் முத்துசாமி 2/24 [4], அன்டிலே சிமலானி 1/5 [1], கவெனா மபஹா 0/19 [2.5])

போட்டியின் நாயகன்: டிம் செய்ஃபேர்ட்.

இந்நிலையில், இன்று மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சிம்பாப்வேயை நியூசிலாந்து எதிர்கொள்ளவுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 24, ஜூலை 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.